Tsi11T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

07-02-2024

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்க்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** **விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

1) அச்சு இயந்திரத்தை வடிவமைத்தவர் யார்?

அ) தாமஸ் மன்றோ ஆ) சார்லஸ்வுட்

இ) ஜான் கூட்டன் பர்க் ஈ) ஹென்றி ஆடம்ஸ்

2) மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடல் எது?

அ) தாயின் மணிக் கொடி பாரீர் ஆ) வந்தே மாதரம்

இ) ஜன கண மன ஈ) நம்ரதா கே சாகர்

3) 'செவ்வாழை' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) கலைஞர் மு.கருணாநிதி ஆ) பேறிஞர் அண்ணா

இ) தந்தை பெரியார் ஈ) புதுமைப்பித்தன்

4) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

5) மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடு பயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

6) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க

1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு

2) அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா

3) வாடிவாசல் - இ) குறுந்தொகை

4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

அ) அ ஆ இ ஈ ஆ) ஆ ஈ அ இ இ) இ ஈ ஆ அ ஈ) இ ஈ அ ஆ

7) 'பசுவய்யா' என்ற புனைபெயரில் கவிதை எழுதியவர் யார்?

அ) சுஜாதா ஆ) பாரதியார்

இ) சுந்தர ராமசாமி ஈ) இராமகிருஷ்ணன்

8) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

அ) ஜி.யு.போப் ஆ) வீரமாமுனிவர்

இ) ஜார்ஜ் எல் ஹார்ட் ஈ) கால்டுவெல்

9) நர்த்தகி நடராஜ் மதுரையில் உள்ள ................ ஊரைச் சேர்ந்தவர்.

அ) வண்டியூர் ஆ) ஆரப்பாளையம் இ) பழங்காநத்தம் ஈ) அனுப்பானடி

10) பொருத்துக

அ) நேரிசை ஆசிரியப்பா - முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா - அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

11) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல் மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

12) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள்-இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

13) கலிப்பா ............. ஓசை வடிவம் கொண்டது

அ) அகவல் ஆ) செப்பல் இ) தூங்கல் ஈ) துள்ளல்

14) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3×2=6**

15) 'கற்றேன் என்பாய் கற்றாயா?' என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

16) செந்துறைப் பாடாண்பாட்டு - துறைவிளக்கம் எழுதுக.

17) படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

18) வளரும் <u>காவில் முகில் தொகை</u> ஏறும் - பொன் மாடம் எங்கும் அகிற்புகை நானும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2×2=4**

19) மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன?

20) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

21) ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும். பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** **7×2=14**

22) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக**

அ) மறுத்து ஆ) மலிந்த

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) மணிக்குலம் ஆ) கருங்கடல்

24) **மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**

அ) பழம் உண்டு பால் குடித்தான்

ஆ) காகம் கத்த மயில் கூவியது

25) **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

வலி, வளி, வழி

26) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

அ) சரித்திரம் ஆ) பாஸ்போர்ட்

27) மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க

28) காலங்காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29) **ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) குறிப்புணர்வார் ஆ) கெடுக

30) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

வைகை (அல்லது) அறிவில்லாதவன்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

31) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

32) காலமறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

33) 'ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்'-
இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

35) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36) மரபுவழிக் கல்விமுறைகள் குறித்து எழுதுக.

37) 'சிம்பொனித்தமிழர்' - இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும்பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக

38) தாமஸிகம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3×4=12

39) சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக.

**(அல்லது)**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிபோம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!
-கவிமணி

41) பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக

**(அல்லது)**

பருவங்(கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது குறித்து எழுதுக.

42) பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்

**(அல்லது)**

ஆ) தன்கையே தனக்குதவி

43) **தமிழாக்கம் தருக.**

1) A picture is worth a thousand words
2) Work while you work and play while you play
3) Looking at beauty in the world is the first step of purifying the mind.
4) "Villages are the back bone of our country said Gandhiji

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு, நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார்; தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களை எல்லாம் ஆழ்ந்துகற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கித் தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்' எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்

**வினாக்கள்**

i) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

ii) பண்டிதர் விரும்பிப் பயின்ற துறைகள் யாவை?

iii) ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய அமைப்பு எது?

iv) பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் எது?

சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக்
வல்லம்-627809
தென்காசிமாவட்டம்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்வீர்கள் என்பதை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரனப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்கவும்.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47) அ) 'ஏடு தொடக்கி வைத்து' ......... எனத் தொடங்கும் யுகத்தின் பாடல்

ஆ) செயல் - என முடியும் குறள்

\- - - - - -

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com